DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI
Case No. MC 12 /2018
Petitioner Witness 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Murugesan | Caste | : |
| Father's Name/ Husband's Name | : S/o.Mariappan | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of January 2025.
(Petitioner present. Respondent absent. Petition u/s. 126(2) Crpc filed and allowed. Both side advocates present )

முதல் விசாரணை :

1. நான் இவ்வழக்கின் மனுதாரர் தரப்பு ஆவேன். மனுதாரர் எனது தாயார் ஆவார். எதிர் மனுதாரர் எனது தந்தை ஆவார். எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

2. எனது தரப்பில் கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வ. எண். | தேதி | ஆவணம் | தன்மை | ஆவணக் குறியீடு |
|---|---|---|---|---|
| 1. | - | எனது ரேஷன் கார்டு | அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் | மசாஆ.4 |
| 2. | - | எனது தந்தை மற்றும் அவரது இரண்டாவது மனைவியின் பேத்தியான கனிகாவின் பூப்புநன்னீராட்டுவிழா அழைப்பிதழ் | அசல் | மசாஆ.5 |

மனுப்படி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. நான் பொள்ளாச்சியில் மளிகைக்கடை வைத்து நடத்தி வருகிறேன். தற்போது என் தந்தை உடல்நிலை சரியில்லாமல் இருந்து வரும் விபரம் எனக்கு தெரியும். என் தந்தைக்கு இருதய அறுவை சிகிக்சை மேற்கொள்ளப்பட்டு தற்போது அதற்காக மருந்து மாத்திரைகள் உட்கொண்டு வரும் விபரம் குறிப்பிட்டு எனக்கு தெரியாது. ஒவ்வொரு வாரமும் நானும் எனது தாயாரும் வாரச்சந்தைகளில் கடை போடுவது வழக்கம் என்றால் சரிதான். எனவே மாதம் ரூபாய் 50 ஆயிரம் சம்பாதித்து வருகிறோம் என்றால் சரியல்ல. கொரொனா காலத்தில் இருந்து வியாபாரம் சுமாராகதான் உள்ளது. எனக்கு இரண்டு மகள்கள் உள்ளனர்.

2. எனது மூத்த மகள் UPSC examination க்காக பயிற்சி எடுப்பதற்கு நான் செலவு செய்தேன் என்றால் சரிதான். எனது இரண்டு மகள்களின் கல்வி செலவுக்காக எனது தந்தையார்தான் அவ்வபோது பணம் கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. எனது பாட்டியின் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்தபோது என் தந்தையின் அக்காவிற்கு சேரவேண்டிய சொத்துக்களை அவர் வேண்டாம் என்று கூறி என் தந்தைக்கு கொடுத்தார் என்றாலும் மேற்படி சொத்தை என் தந்தை என் தாயாரின் பெயரில் எழுதி வைத்தார் என்றாலும் சரியல்ல. என் பாட்டி எனது பெயருக்கு எழுதி வைத்தார். மேற்படி சொத்தை சேலத்தில் உள்ள ஒரு நபருக்கு விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். மேற்படி வீட்டிலும் எனது தந்தை ஒரு பாகத்தை தனது பெயருக்கு பிரச்சனை செய்து எழுதி வாங்கிவிட்டார். மேற்படி பாகத்தை தனது இரண்டாவது மனைவியின் மகன் மெய்யரசன் பெயரில் எழுதி வைத்துவிட்டார்.

3. என் தந்தை பெயரில் எந்த சொத்தும் இல்லை என்றாலும் எனவே தான் அது குறித்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் என் தந்தை அவரின் அனைத்து சொத்துக்களையும் அவரது இரண்டாவது மனைவி மற்றும் அவர்களது மகன், மகள் பெயரில் எழுதி வைத்துவிட்டார்.அவ்வாறு என் தந்தை அவர்கள் பெயரில் சொத்துக்களை எழுதி வைக்கவில்லை என்றாலும் எனவே தான் அவ்வாறு கூறப்படும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

4. ஒரு இந்து மகனாக என் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் இருந்து நான் தவறிவிட்டேன் என்றாலும் என் தந்தையின் வயதான காலத்தில் நான் அவரை

கவனித்துக்கொள்ளாமல் நான் அவரிடம் இருந்து ஜீவனாம்னசம் எதிர்பார்க்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு எந்த தந்தைதான் திருமணம் செய்து வைத்தார் என்றாலும் எனது சிறு வயது முதலே என்னைய் என் தாயையும் என் தந்தையார்தான் கவனித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. என் சிறு வயதிலேயே என் தந்தை 2 வது திருமணம் செய்துகொண்டு எங்களை விட்டு பிரிந்து சென்றுவிட்டார்.

5. சேலம் குடும்ப நல நீதிமன்றத்தில் என் தாயார் தாக்கல் செய்த மனுவில் என் தந்தையின் 2 வது திருமணம் பற்றி கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி நீதிமன்றத்தில் என் தாயும் தந்தையும் சேர்ந்து வாழவேண்டும் என்று 2008 ம் வருடம் உத்தரவாகியிருந்தது. மேற்படி வழக்கில் ஒவ்வொரு மாதமும் இடைக்கால ஜீவனாம்சமாக ரூபாய் 3 ஆயிரம் என் தாயாருக்கு என் தந்தை வழங்கவேண்டும் என்று உத்தரவாகியிருந்தது என்றால் சரிதான். 2008 முதல் இம்மனுதாக்கல் செய்யப்பட்ட வருடமான 2018 வரை சுமார் 10 வருட காலம் என் தந்தை சரிவர மேற்படி ஜீவனாம்ச தொகையை என் தாயாருக்கு செலுத்தி வந்தார் என்றாலும் எனவேதான் ஜீவனாம்சம் கேட்டு 2018 ம் வருடம் வரை என் தாயார் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. என் தந்தை இது வரை ஜீவனாம்ச தொகை செலுத்தவில்லை. அவ்வாறு வழக்கிற்காக பொய்யான சங்கதியை கூறுகிறேன் என்றாலும் என் தந்தை சரிவர மேற்படி ஜீவனாம்ச தொகையை என் தாயாருக்கு செலுத்தி வந்தார் என்றாலும் சரியல்ல.

6. என் தந்தை அடிக்கடி ஆனைமலை மாசானியம்மன் கோவிலுக்கு வருவார் என்றால் சரிதான். அச்சமயங்களில் என் தந்தை என்னையும் என் மகள்களையும் என் தாயையும் பார்த்து எங்கள் செலவுக்கு பணம் கொடுத்து வந்தார் என்றாலும் சரியல்ல.

7. என் தந்தையின் தங்கை மற்றும் எனது அத்தையான ஜானகி என்பவரின் மகளைத்தான் எனக்கு என் தந்தை திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் தந்தை தனது தங்கையை பார்க்க அடிக்கடி வருவார் என்றால் சரிதான். என் மனைவிக்கு என் தந்தை மாமாஎன்கிற முறையில் பேசுவார் என்றால் அவ்வாறு பேசுவதில்லை. வேண்டிய பொருளாதார உதவிகளை என் தந்தை செய்து வந்தார் என்றால் சரியல்ல.

8. நானும் என் தாயாரும் மளிகை கடை மற்றும் காய்கறி கடை வைத்து நடத்தி மேலும் வார சந்தைகளில் காய்கறி கடைகள் போட்டு நன்கு சம்பாதித்து வருகிறோம் என்றாலும் அதன் மூலம் நன்றாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சரியல்ல. தற்சமயம் என் தந்தை எந்த இடத்தில் கடை வைத்து நடத்தி வருகிறார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அவர் பெயரில்என் னசொத்துக்கள் உள்ளன என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

9. கனிகா என்பவர் என் தந்தையின் 2 வது மனைவியின் மகளுடைய மகள் ஆவார். எனது தந்தையாரின் வயதான காலத்தில் அவரை நானும் எனது தாயாரும் பார்த்துக்கொள்ளாமல் தனியாகவிட்டுவிட்டு வந்தோம் என்றாலும் அதன்பிறகு அவரது உறவிறனான தவமணி என்பவர் அவரை கவனித்துக்கொண்டு வருகிறார் என்றாலும் அந்த முறையில் அவரது பேத்திக்கு தாத்தா என்று மசாஆ 5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கிற்காக என் தாயாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே வேண்டிய பொருளாதான உதவிகளை என் தந்தையானவர் எனது தாயார் மறறும் எனது குடும்பதிற்கு செய்து வந்துள்ளார் என்றாலும் எனவே என் தாயார் என் தந்தைக்கு எதிராக ஜீவனாம்சம் கோர உரிமையில்லை என்றாலும் சரியல்ல. என் முதல் விசாரணை சங்கதிகளை வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.